Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 483/2024

2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 25-ம் தேதி செவ்வாய்க்கிழமை குற்றம் முறையிடுபவரின் ம.சா. 2 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ம.சா. | - | 2 | தொழில் | - | வீட்டுக்குடித்தனம் |
| பெயர். | - | செங்கம்மாள் | வட்டம் | - | திருவெண்ணெய்நல்லூர் |
| க/பெ. | | ராஜேந்திரன் | சமயம் | - | |
| கிராமம் | - | திருவெண்ணெய்நல்லூர் | வயது | - | 50 |

25.11.2025

1வது எதிரி ஆஜர். 2 முதல் 4 எதிரிகள் ஆஜரில்லை. 2 முதல் 4 எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை.**

1. எனது மகளை 1வது எதிரிக்கு 12 வருடங்களுக்கு முன்பு எல்லோர் முன்னிலையிலும் திருமணம் நடந்தது. கல்யாணம் நடந்து 5-6 வருடம் குடும்பமாக இருந்தது. அதன்பிறகு அன்னோன்யமாக தான் இருந்தார்கள். அதற்குள் பிரச்சனையானது தெரியவில்லை. அதன் பிறகு சண்டை போட்டுக்கொண்டு வந்துவிட்டது, மீண்டும் அனுப்பி வைத்தேன்.

2. அதற்கு என்ன என்ன தேவையோ அனைத்தும் செய்தேன். கல்யாணத்திற்கும் என்ன சாமானோ அனைத்தும் எடுத்துக்கொடுத்தேன். அப்படி இருக்கையில் 1வது எதிரியான எனது மருமகன் வேறொரு பெண்ணை கைவசம் பண்ணிக்கொண்டு, சண்டை, சண்டை என்று இப்படியே பண்ணிக்கொண்டிருந்தார்.

3. எனக்கு 2 பையன், 1 பெண் தான். கல்யாணம் சிறப்பாக தான் செய்தேன். 5 பவுன் நகை போட்டேன். மாப்பிள்ளைக்கு குருமாத் 1 1/2 பவுன், மோதிரம் 1/2 பவுன் போட்டேன். கல்யாணத்தின் போது 3 பவுன் நெக்லஸ் பொண்ணுக்கு போட்டேன். ஆடி வரிசை, பொங்கை வரிசைகளுக்கெல்லாம் கொஞ்ச கொஞ்சமாக நகை எடுத்துப்போட்டேன்.

4. என் வீட்டுக்காரர் 10 வருடமாக வெளிநாட்டில் இருந்தார். ஒரு பெண் என்பதால் அதுக்கு என்ன என்ன செய்யனுமோ அனைத்தும் செய்தோம். வேற ஒரு பெண்ணுடன் தொடர்பு செய்துக்கொண்டார். இஸ்டப்பட்டு தான் பெரியவர்களின் சம்மதத்தோடு திருமணம் செய்துக்கொண்டார்.

5. 5 வருடமான என் வீட்டில் தான் பசங்களுக்கெல்லாம் டியூசன் சொல்லிக்கொடுத்து இருக்கிறது, என் கணவர் இறந்துவிட்டார் என்று சொல்லி சாட்சி அழுகிறார். 3 வருடமாக கோர்டில் போட்டு நடந்து கொண்டு தான் இருக்கிறேன். நான் செய்ததை எல்லாம் சொல்லிவிட்டேன், செய்யாததை அவர்களை சொல்ல சொல்லுங்கள் என்று சாட்சி சொல்கிறார். மேற்கொண்டு என்னால் பேச முடியவில்லை என்று சாட்சி சொல்கிறார். 1 வது எதிரி பொண்டாட்டி வேண்டுமென்று வேறொரு கல்யாணம் செய்து கொண்டு உல்லாசமாக இருக்கிறார். எனது மகள் வாழ்க்கை என்ன ஆகும் என்று இருக்கிறார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போதுமான வாய்ப்பு கொடுத்தும் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM,
T.V.Nallur.